**09.04.2025**

**அசல் வழக்கு எண். 146 /2023**

**வா.சா.1-** திரு. சேவியர்

**சாட்சி முன்னிலையானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-**

எனக்கு சொந்த ஊர் ரம்மதபுரம் நடுவூர் துரைக்குடியிருப்பு. 2020 ம் வருடம் சென்னைக்கு நான் வேலைக்கு சென்றேன். 2, 3 வருடங்கள் அங்கு இருந்தேன். சென்னையில் ராமபுரத்தில் இருந்தேன். எலக்டிரிசீயன் வேலை பார்த்தேன். பிரதிவாதி கூலி வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். அவருக்கு படிப்பறிவு இல்லை என்றால் சரியல்ல 6 ம் வகுப்பு வரை படித்திருக்கிறார். தபசில் வீடு ரம்மதப்புரத்தில் இருக்கிறது. தாவா சொத்து 10 சென்ட் இடமும் அதனுடன் கூடிய வீடும் என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் அந்தோணி முத்து நாடார் என்பவருக்கு பாத்தியம் என்றால் சரிதான். அந்தோணி முத்து நாடார் அவருடைய மனைவி பூங்கனியம்மாளுக்கு சொத்தை பாத்தியப்படுத்திக்கொடுத்தார் என்றால் சரிதான். பூங்கனியம்மாளிடமிருந்து பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி கிரையம் வாங்கும் போது காலியிடம் என்றால் சரிதான். அந்த இடத்தில் பிரதிவாதி தான் வீடு கட்டினார் என்றால் சரியல்ல செல்வராஜ் கட்டினார். செல்வராஜ் வீடு கட்டினார் என்பதற்கு ஆவணம் உண்டா என்றால் உண்டு. வழக்கு சொத்தில் பிரதிவாதி அரசாங்கத்தில் மானியம் பெற்று வீடு கட்டினார் என்றால் சரியல்ல. பிரதிவாதி அரசாங்கத்தில் மானியம் பெற்று வீடு கட்டியதால் அந்த வீட்டை பிரதிவாதி விற்பனை செய்ய அதிகாரமுடையவர் அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி செல்வராஜ்க்கு 2012 ம் ஆண்டு கிரையம் கொடுத்தார். வீடு கட்டி செல்வராஜ் தான் குடியிருந்தார். வழக்கு சொத்தில் செல்வராஜ் எந்த காலத்திலும் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா இடத்தில் வீடு கட்டுவதற்காக பிரதிவாதி கூத்தன்குழியை சேர்ந்த மலையப்பன் என்பவரிடம் ரூ.2 லட்சம் கடன் பெற்றிருந்தார் என்றும் மேற்படி மலையப்பனும் சசெல்வராஜிம் சேர்ந்து பிரதிவாதியிடம் அடமானம் பத்திரம் எழுதி வாங்குவதற்கு பதிலாக கிரைய பத்திரம் எழுதி வாங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனவே செல்வராஜ் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் சட்டப்படி

BARSAD BEGUM A
Digitally signed by BARSAD BEGUM A
Date: 2025.04.09 15:29:11 +0530

செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. செல்வராஜ் தபசில் சொத்தை அனுபவம் செய்து வந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்வில்லை என்றால் சரியல்ல வீட்டு வரி ரசீது தாக்கல் செய்துள்ளார். செல்வராஜிடம் இருந்து நான் 2014 வது வருடம் கிரையம் வாங்கினேன். நான் கிரையம் வாங்கும் போது பிரதிவாதி அந்த வீட்டில் குடியிருந்தார் என்றால் சரியல்ல. செல்வராஜ் எனது பெயருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் அனுபவம் ஒருகாலமும் என் வசம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் பிரதிவாதி நாளது தேதி வரை குடியிருந்து வருகிறார் என்றால் 2023 வது வருடத்தில் பூட்டை உடைத்து உள்ளே சென்று விட்டார். பூட்டை உடைத்து வீட்டுக்குள் சென்று விட்டதாக பிரதிவாதி மீது போலீசில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம். அவ்வாறு புகார் கொடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாளது தேதி வரை பிரதிவாதி தான் தபசில் சொத்தில் குடியிருந்து வருகிறார் பூட்டை உடைத்து குடியேறியதாக சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. நான் மோசடியான முறையில் தாவா சொத்திற்கான ஆவணத்தை என் பெயரில் மாற்றம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் பெயரில் ஆவணங்கள் மாற்றம் செய்யும் முன்பு பிரதிவாதியை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நாளது தேதி வரை பிரதிவாதி தான் மின் கட்டணம் செலுத்திவருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு மத்தியில் பிரதிவாதியிடம் நான் சமாதானம் பேசி 3 லட்சம் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல சமாதானம் பேசவில்லை. பிரதிவாதியிடம் இருந்து 3 லட்சம் வாங்கி கொண்டு வாங்கவில்லை என பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை -</u> இல்லை.**

BARSAD BEGUM A

Digitally signed by BARSAD BEGUM A
Date: 2025.04.09 15:29:17 +0530